# தங்கப் பதக்கம் பெற்ற கிரிஜா அருள்பிரகாசத்தை வாழ்த்துகிறது தினகரன்





இவ்வாண்டு யாழ். பல்கலை பட்டமளிப்பு விழாவில் மாணவி கிரிஜா அருள்பிரகாசம் தங்கப் பதக்கம் பெற்றார்.

ஊடகத்துறையில் சிறப்புத் தேர்ச்சி பெறும் மாணவருக்கு ஆண்டுதோறும் வழங்கப்பட்டுவரும் யாழ். பல்கலைக்கழக ஊடக மாணவனும் ஊடகவியலாளருமான அமரர் சகாதேவன் நிலக்சன் ஞாபகார்த்த தங்கப்பதக்கம் இந்த ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 39ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் மாணவி கிரிஜா அருள்பிரகாசத்திற்கு வழங்கப்படுகின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 39ஆவது பட்டமளிப்பு விழா நான்கு நாட்கள் நடைபெற்றது.

வெள்ளியன்று நடைபெற்ற அமர்வின் போதே யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடக கற்கைகள் துறையில் ஊடகவியலில் திறமைச் சித்தி பெற்ற மாணவியான மன்னார் மாவட்டத்தின் விடத்தல் தீவைச் சேர்ந்த கிரிஜா அருள்பிரகாசத்திற்கு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடக மாணவனும் ஊடகவியலாளருமான அமரர் சகாதேவன் நிலக்சன் ஞாபகார்த்த தங்கப் பதக்கம் வழங்கப்பட்டது.

இதழியல் மற்றும் வாசிப்பு மீது கொண்ட ஆர்வத்தினால் ஊடகத் தொழில்சார் பயிற்சிக்காக எமது தினகரன் பத்திரிகையைத் தெரிவு செய்து அங்கு தொழில்சார் பயிற்சியையும், ஊடகவியலாளர்களின் அனுபவ அறிவினையும் பெற்று எம்முடன் இரண்டு மாதங்கள் பணியாற்றியவர் கிரிஜா. இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஊடகக் கற்கைகள் துறையில் தற்காலிக உதவி விரிவுரையாளராகப் பணியாற்றக்கூடிய வாய்ப்பும் பெற்றிருக்கிறார். அவருக்கு தினகரனின் வாழ்த்துகள்.

## காசாவின் தற்போதைய நிலைமை: இலங்கை ஆழ்ந்த கவலை

காசாவின் தற்போதைய நிலைமை குறித்து ஆழ்ந்த கவலை வெளியிட்டுள்ள இலங்கை, காசாவை மேலும் மோசமாக்கும் எந்தவொரு நடவடிக்கையையும் தவிர்க்குமாறு அனைத்து தரப்பினரையும் கேட்டுக்கொண்டுள்ளது. இதுதொடர்பாக வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில், விரைவில் இப்பகுதியில் நிலையான அமைதி நிலைநாட்டப்படும் என நம்புவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.



Darley Butler | DARLEY BUTLER HEALTHCARE | 175

Darley Butler & Co. Ltd, is expanding its Health Care (DBHC) division, which markets pharmaceuticals, personal hygiene products, and infant nutrition. We seek dynamic, self-motivated individuals to join our marketing team immediately for the vacancies at **Eastern Region**. If you're energetic and passionate, explore this exciting career opportunity with us!

**MEDICAL DELEGATES**

**Brief Job Responsibilities:**

- Plan and execute promotional activities to raise awareness of medical products.
- Research market trends, competitors, and healthcare needs.
- Conduct product demonstrations and support the sales team.
- Ensure compliance with regulatory and ethical standards.
- Build relationships with healthcare professionals and gather product feedback.

**Applicants' Profile**

- Strong verbal and written communication skills in English and presentation skills
- Excellent interpersonal and relationship-building skills to engage with healthcare professionals.
- Understanding of pharmaceutical regulations and compliance standards.
- Commitment to ethical conduct and compliance with industry regulations.
- Previous experience in similar capacity would be advantageous.
- Age: Be below 35 years

Apply with a detailed resume including contact information of two non-related referees within 07 days of this advertisement. Please indicate the position applied in the subject line of the e-mail.

**Head of Human Resources:**
**Darley Butler & Co. Ltd**
**No 98, Sri Sangaraja Mw. Colombo 10**
**careers@darley.lk**

**உங்கள் வணிகத்தை இலங்கை அரசாங்கத்தின் e-GP அமைப்பு மூலம் வளர்த்துக் கொள்ளுங்கள்**

PROMISe

நீங்கள் விற்பனையாளரா அல்லது விநியோகஸ்தரா?
இலங்கை அரசாங்கத்தின் இலத்திரனியல் கொள்முதல் தளமான (e-GP) promise.lk இல் இன்றே பதிவு செய்து, உங்கள் வியாபாரத்தை வளர்த்துக் கொள்ளுங்கள்!

**e-GP என்றால் என்ன?**

இலத்திரனியல் அரசாங்க கொள்முதல் (e-GP) என்பது அரசாங்க கொள்முதல்களை இலத்திரனியல் முறையில் நடத்துவதற்கான நவீன வழியாகும்.

e-GP ஆனது காகித அடிப்படையிலான கொள்முதலுடன் ஒப்பிடும்போது நிறுவனங்களுக்கு நிர்வாகச் செலவுகளைக் குறைக்க வழிவகை செய்கிறது.

**இதன் அனுகூலங்கள் என்ன?**

வணிக வாய்ப்புகளை காணவும் மற்றும் ஒன்லைன் ஏலத்தில் பங்கேற்கவும். ஏலத் திறப்பு விவரங்கள் மற்றும் ஒப்பந்த ஆணைகளை ஒன்லைனில் பெறவும்.

ஒவ்வொரு அரச அமைப்பிற்கும் தனித்தனியாக பதிவு செய்ய தேவையில்லை, இலத்திரனியல் ஏலங்களில் (e-Bidding) பங்கேற்க ஒரே பதிவு போதுமானது.

**தற்போதைய நிலை**

தற்போது promise.lk இல் வாரந்தோறும் சுமார் 700 வணிக வாய்ப்புகள் உள்ளன. இந்த எண்ணிக்கை விரைவில் அதிகரிக்க உள்ளது.

தற்போது இணையம் மூலம் கொள்முதல்/ விலைப்புள்ளிகள் கோரல் (RFQ) நடைபெறுகிறது. தேசிய போட்டி ஏலக் கோரல்கள் (NCB) மற்றும் சர்வதேச போட்டி ஏலக் கோரல்கள் (ICB) விரைவில் வழங்கப்படும்.

எதிர்காலத்தில் e-GP ஐயை கட்டாயமாக்கும் என்று அரசு திட்டமிட்டுள்ளது.

**பதிவு செய்வது எப்படி?**

www.Promise.lk-க்குச் சென்று, "Registration" பிரிவில் "Vendor " என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.

ஒன்லைன் பதிவுப் படிவத்தை நிரப்பவும்

தேவையான ஆவணங்களைப் பதிவேற்றவும்.

உதாரணமாக: வணிகப் பதிவு நகலை (PDF Copy) பதிவேற்றவும்.

உங்கள் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கவும்.

**மேற்கொண்டு செய்ய வேண்டியவை**

பதிவுக் கட்டணம் ரூ. 5000. ஒன்லைன் விண்ணப்பத்தைச் சமர்ப்பித்த பிறகு, கடன்/ வரவு அட்டை மூலம் இந்த கட்டணத்தைச் செலுத்தவும். உங்கள் விண்ணப்பம் 2 நாட்களுக்குள் அங்கீகரிக்கப்படும்.

பின்னர், கடவுச்சொல் எஸ்.எம்.எஸ் மூலம் உங்களுக்கு அனுப்பப்படும். உள்நுழைந்து உங்கள் விவரக்குறிப்பை பூர்த்தி செய்யவும்.

பின்னர், நீங்கள் இலத்திரனியல் ஏல (e-Bidding) சேவையை பயன்படுத்தலாம்.

**மேலதிக தகவல்**

இலத்திரனியல் அரச கொள்முதல் (e-GP) முறையைப் பயன்படுத்துவது குறித்த இலவச ஒன்லைன் பயிற்சிகள் ஒவ்வொரு வாரமும் e-GP செயலகத்தால் நடத்தப்படுகின்றன.

இலத்திரனியல் கற்றல் பிரிவின் கீழ், விற்பனையாளர் பயனர் கையேடு மற்றும் பயிற்சி வீடியோக்களை நீங்கள் அணுக முடியும்.

e-GP Secretariat
Department of Public Finance
Ministry of Finance, Planning and Economic Development

Help Desk; +94-11-215-1467
8.45 AM - 4.00 PM Monday - Friday
Except on Public Holidays